## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட முதலாம் அரையாண்டு பொதுக் கலைமாணித் தேர்வு

2014/2015 (ஜனவரி 2018)

## TL 3122 இலக்கிய விமர்சனத்திற்கு ஓர் அறிமுகம்

: 02 மணித்தியாலங்கள்

– I இலிருந்து இரு வினாக்களையும் பகுதி – II இலிருந்து இரு வினாக்களையும் தெரிவு
ு மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

---

### பகுதி – I

01. (அ) "இலக்கியத் திறனாய்வு" (Literary Criticism) என்றால் என்ன என்பதை அறிஞர்களின் கருத்துக்களின் துணையுடன் வரையறை செய்க.
(12 புள்ளிகள்)

(ஆ) திறனாய்வாளர் ஒருவர் கொண்டிருக்க வேண்டிய பண்புகளைப் பட்டியற்படுத்துக.
(13 புள்ளிகள்)

02. (அ) தமிழில் நவீன திறனாய்வு தோற்றம்பெற்ற சூழலைத் தெளிவுபடுத்துக.
(10 புள்ளிகள்)

(ஆ) தமிழில் நவீன திறனாய்வு முன்னோடிகள் இருவரைக் குறிப்பிட்டு அவர்களின் திறனாய்வுச் செயற்பாடுகளைச் சுருக்கமாக விளக்குக. (15 புள்ளிகள்)

03. (அ) கவிதையொன்றைத் திறனாய்வு செய்யும் போது கவனத்திற்கொள்ள வேண்டிய விடயங்கள் யாவை? (10 புள்ளிகள்)

(ஆ) அவ்வடிப்படையில் பின்வரும் கவிதையைத் திறனாய்வு செய்க.

இளவேனிலும் உழவனும்

காட்டை வகிடுபிரிக்கும்
காலச்சுவடான
ஒற்றையடிப்பாதை.
வீடுதிரும்ப விழைகின்ற காளைகளை
ஏழை ஒருவன்
தோளில் கலப்பை சுமந்து
தொடர்கின்றான்.

தொட்டதெல்லாம் பொன்னாக
தேவதையின் வரம்பெற்ற
மாலைவெய்யில்
மஞ்சட்பொன் சரிகையிட்ட
நிலபாவாடை நீளவிரிக்கிறது.
இதயத்தைக் கொள்ளையிட
வண்ணத்துப் பூச்சிகள்
வழிமறிக்கும்.
பொற்குருவி ஒன்று
மரக்கிளையின் நுனிக்கு வந்து அதட்டும்.
அங்குமிங்கும்
காட்டுமல்லிகைகள்
காற்றையே தூதனுப்பி
கண் சிமிட்டும்.

அழகில் கால்கள் தரிக்கும்.
முன்நடக்கும் எருதுகளோ,
தரிக்கா.

ஏழையவன்
ஏகும்வழி நெடுந்தூரம். (15 புள்ளிகள்)

## பகுதி – II

04. "பழந்தமிழ் இலக்கிய, இலக்கண நூல்களுக்கு எழுதப்பட்டுள்ள உரைகள் நவீன காலத்துத் திறனாய்வுப் பண்புகளைக் கொண்டுள்ளன" ஆராய்க.

(25 புள்ளிகள்)

05. இலக்கியக் கோட்பாடு (Literary Theory) , இலக்கிய விமர்சனக் கோட்பாடு (Literary Critical Theory), இலக்கிய விமர்சனம் (Literary Criticism) ஆகியவற்றை வரையறை செய்து அவற்றுக்கிடையிலான தொடர்புகளை விளக்குக.

(25 புள்ளிகள்)

06. நவீன இலக்கிய விமர்சனம் சமூகவியல், உளவியல், வரலாறு, மொழியியல் ஆகிய துறைகளுடன் எவ்வாறான தொடர்புகளைக் கொண்டுள்ளது என்பதை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக. (25 புள்ளிகள்)